ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கண்ணார் கடல்சூழ் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணார் கடல்சூழ் ॥

## திருவெங்கடம் - 3

‡கண்ணார் கடல் சூழ்⋆ இலங்கைக்கிறைவன் தன்⋆
திண்ணாகம் பிளக்கச்⋆ சரம் செல உய்த்தாய்!⋆
விண்ணோர் தொழும்⋆ வேங்கட மா மலை மேய⋆
அண்ணா! அடியேன்⋆ இடரைக் களையாயே (1)

இலங்கைப் பதிக்கு⋆ அன்றிறையாய⋆ அரக்கர்
குலம் கெட்டவர் மாளக்⋆ கொடிப் புள் திரித்தாய்!⋆
விலங்கல் குடுமித்⋆ திருவேங்கடம் மேய⋆
அலங்கல் துளப முடியாய்!⋆ அருளாயே (2)

நீரார் கடலும்⋆ நிலனும் முழுதுண்டு⋆
ஏர் ஆலம் இளந் தளிர்மேல்⋆ துயில் எந்தாய்!⋆
சீரார்⋆ திருவேங்கட மா மலை மேய⋆
ஆரா அமுதே!⋆ அடியேற்கருளாயே (3)

உண்டாய் உறிமேல்⋆ நறு நெய் அமுதாக⋆
கொண்டாய் குறளாய்⋆ நிலம் ஈர் அடியாலே⋆
விண் தோய் சிகரத்⋆ திருவேங்கடம் மேய
அண்டா!⋆ அடியேனுக்கருள் புரியாயே (4)

தூணாய் அதனூடு⋆ அரியாய் வந்து தோன்றி⋆
பேணா அவுணன் உடலம்⋆ பிளந்திட்டாய்!⋆
சேணார் திருவேங்கட⋆ மா மலை மேய⋆
கோள் நாகணையாய்!⋆ குறிக்கொள் எனை நீயே (5)

மன்னா⋆ இம் மனிசப் பிறவியை நீக்கி⋆
தன்னாக்கித்⋆ தன்னினருள் செய்யும் தலைவன்⋆
மின்னார் முகில் சேர்⋆ திருவேங்கடம் மேய⋆
என் ஆனை என் அப்பன்⋆ என் நெஞ்சில் உளானே (6)

மானேய் மட நோக்கி⋆ திறத்தெதிர் வந்த⋆
ஆனேய் விடை செற்ற⋆ அணி வரைத் தோளா!⋆
தேனே!⋆ திருவேங்கட மா மலை மேய⋆
கோனே! என் மனம்⋆ குடி கொண்டிருந்தாயே (7)

சேயன் அணியன்⋆ என் சிந்தையுள் நின்ற
மாயன்⋆ மணி வாள் ஒளி⋆ வெண் தரளங்கள்⋆
வேய் விண்டுதிர்⋆ வேங்கட மா மலை மேய⋆
ஆயன் அடி அல்லது⋆ மற்றறியேனே (8)

வந்தாய் என் மனம் புகுந்தாய்⋆ மன்னி நின்றாய்⋆
நந்தாத கொழுஞ்சுடரே⋆ எங்கள் நம்பீ!⋆
சிந்தாமணியே⋆ திருவேங்கடம் மேய
எந்தாய்!⋆ இனி யான் உன்னை⋆ என்றும் விடேனே (9)

‡வில்லார் மலி⋆ வேங்கட மா மலை மேய⋆
மல்லார் திரள் தோள்⋆ மணி வண்ணன் அம்மானைக்⋆
கல்லார் திரள் தோள்⋆ கலியன் சொன்ன மாலை⋆
வல்லார் அவர்⋆ வானவர் ஆகுவர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥